# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.** 62/2016

பெயர்: **வெங்கடேஸ்வரன்** நாள்: 05.03.2026

பி.வா.சா.2 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – வெங்கடேஸ்வரன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம்: 02.45

நான் எந்த வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால், 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் லாரி ஓட்டுனராக பணியாற்றி வருகிறேனா என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி சேகர் அவர்கள் எனக்கு சுமார் 40 ஆண்டுகள் பழக்கப்பட்டவர் என்றால், சரிதான். அவர் எனக்கு நெருங்கிய நண்பர் ஆவார். இந்த வழக்கின் வாதி பச்சியம்மாள் என்னுடைய தாயார் என்றால், சரிதான். 2-ம் வாதி ரவிகுமார் என்னுடைய தம்பி மற்றும் 3-ம் வாதி ராஜாமணி என்னுடைய மூத்த சகோதரி ஆவார். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் யார் எழுதிக் கொடுத்தது என்றால், தெரியாது. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால், தெரியும். வாதிகள் தரப்பில் எனக்கு சுமார் 20, 30 ஆண்டுகளாக குடிப்பழக்கம் உள்ளதாக கூறியுள்ளார்கள் என்றால், சரிதான். என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும். அதிலுள்ள பத்திரம் மற்றும் விஸ்தீரணத்தின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். என்னுடைய பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரத்தை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால், பத்திர அலுவலகத்தில் எழுதி கொடுத்தார்கள். எனது தாயார் பச்சியம்மாள் மற்றும் வெங்கடேஸ்வரன் ஆகிய நான், மற்றும் எனது சகோதரர் ரவிகுமார் ஆகியோர் எழுதிக் கொடுத்த பவர் பத்திரத்தின்படி பவர் ஏஜெண்ட் சாந்தா என்பவர் எழுதிக் கொடுத்தார். அதன்படி சர்வே எண்.407/6 -ல் 42 செண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.தா.சா.ஆ-3 ஆவணத்தின் சொத்து விவரத்தில் 42 செண்ட் நிலம் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதில் தார்சு வீடு பற்றியோ ஓட்டு வீடு பற்றியோ வீட்டு வரி இரசீது, கதவு எண் மற்றும் மின் இணைப்பு எண் பற்றி எதையும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வீட்டைப்பற்றியும், இதர விவரங்கள்

பற்றியும் நான் ஏன் எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால், கிரையச்செலவு அதிகமாகும் என்பதால் நான் காட்டவில்லை. அப்பொழுது இந்த கிரையம் செய்ய கிரைய செலவு எவ்வளவு ஆனது என்றால், ரூபாய் 70/-ஆனது. வீட்டைச்சேர்த்தால் எவ்வளவு ஆகும் என்று எனக்கு யார் சொன்னது என்றால், பத்திர அலுவலகத்தில் கேட்டேன் எவ்வளவு என்று அவர்கள் சொல்லவில்லை. உண்மையில் எனக்கு பத்திரத்தின் அடிப்படையில் எந்த வீடும் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சாந்தா என்பவருக்கு வாதிகள் மூவரும் மற்றும் 2-ம் பிரதிவாதியாகிய நானும் சேர்ந்து ஒரு பவர் பத்திரம் 04.02.2008 தேதியன்று எழுதிக் கொடுத்தோம் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் 04.02.2008 தேதியிட்ட பவர் பத்திரம் வா.த.சா.ஆ.-2 ஆவணம் என்றால், சரிதான். மேற்படி பத்திரத்தின் சொத்து விவரத்தில் - "இதன் மத்தியில் பு.ஏ.0.97 ½ தீ.ரூ.0.32 உள்ள நிலம் பூராவும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் 42 செண்ட் கிரையம் எழுதிய பின்னர் வாதிகளாகிய பச்சியம்மாள், ரவிகுமார், ராஜாமணி ஆகியோர் சாந்தாவிற்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரத்தை இரத்து செய்துவிட்டார்கள் என்றால், சரிதான். 20.01.2015 தேதியிட்ட பொது அதிகார இரத்து பத்திரம் என்னிடம் காட்டப்படும் வா.சா.த.ஆ.-4 ஆவணம் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் 2-ம் பக்கத்தில் "அதாவது ஏக்.97 ½ சென்ட் சொத்துக்களை ஒரு பகுதியை அதாவது ஏக். 0.92 செண்ட் விற்றது போக மீதி 0.05 ½ சென்ட் நிலத்தில் எங்கள் பாகம் ஏ.க்.0.04 ½ சென்ட் உள்ளது" என்று கண்டுள்ளது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் எண் 2-ல் "எனது தந்தை அய்யமுத்துவிற்கும் மற்றும் அய்யண்ணன் என்பவருக்கும் கூட்டாக 27.05.1985 தேதியிட்ட பாகக்காரர் பத்திர ஆவணப்படி ஒதுக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதனை தொடர்ந்து "ஆனால் பாகக்காரர் ஆவணத்தில் குறிப்பிட்டடுள்ளபடி 0.97 ½ செண்ட் நிலமானது பூஸ்திதியில் இல்லை. உண்மையில் 0.92 செண்ட் நிலம் மட்டுமே அளவு படி பூஸ்திதியில் உள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட 27.05.1985 தேதியிட்ட பதிவு செய்த பாகப்பிரிவினை பத்திரத்திலும் வா.த.சா.ஆ.2 மற்றும் 4 ஆகிய பதிவு செய்யப்பட்ட பத்திரத்திலும் மொத்த விஸ்திரணம் 97 ½ செண்ட் என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் நான் நிலத்தில்

92 செண்ட் தான் உள்ளது என்று சொல்கிறேன். 92 சென்ட் நிலம் தான் உள்ளது என்பதை நிரூபிக்க இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் எந்த ஆதாரமும் இல்லாமல் 97 ½ செண்ட் இருக்கும் இடத்தை 92 செண்ட் நிலம் தான் உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சாந்தாவிடமிருந்து 42 செண்ட் நிலம் கிரையம் வாங்கியதற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. எவ்வளவு தொகை யாரிடம் கொடுத்தீர்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது, பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 50 செண்ட் நிலத்தை யாருக்கு கொடுத்தீர்கள் என்றால், என்னுடைய சகோதரர் 2-ம் வாதி ரவிகுமாருக்கு விற்று கொடுத்தேன். 50 செண்ட் நிலத்தை விற்று கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக 42 செண்ட் நிலத்தை நான் கிரையம் பெற்றுக் கொண்டேன். எனக்கு குடிப்பழக்கம் இருக்கும் காரணத்தினால் என்னுடைய தாயார் பச்சியம்மாளை அடித்து துன்புறுத்தியதால் 42 செண்ட் நிலத்தை நான் பணம் ஏதும் கொடுக்காமல் கிரையம் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல. வா.த.சா.ஆ.-3ன் படி 42 செண்ட் காலிநிலம் தான் கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றும் அந்த 42 செண்ட்டில் 31 செண்ட் நிலத்தை வேறு நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு மீதம் இருந்த 11 செண்ட் நிலத்தை 1-ம் பிரதிவாதி எஸ்.கே.சேகர் எனது 30 ஆண்டுகால நண்பர் என்பதாலும் வாதிகளின் மீது எனக்கு இருந்த வெறுப்பினாலும் எனக்கு இருந்த குடிப்பழக்கத்தினாலும் 1-ம் பிரதிவாதி எஸ்.கே.சேகர் தயாரித்து கொடுத்த கிரைய பத்திரத்தில் நான் கையெழுத்து இட்டு நான் மோசடியாக வாதிகள் சுவாதீன அனுபவத்தில் இருந்த வீடு, மின் இணைப்புகள், வரி விதிப்பு, கதவு எண் இவையெல்லாம் குறிப்பிடப்பட்டு பொய்யாக ஆவணத்தை தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. அவ்வாறு 1-ம் பிரதிவாதி எஸ்.கே.சேகர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரையத்திற்கு நான் பணம் ஏதும் வாங்காமல் எழுதி கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. எனக்கு இருக்கும் குடிப்பழக்கத்தினாலும் மற்றும் 1-ம் பிரதிவாதி எஸ்.கே.சேகர் அவர்களுடன் சுமார் 30 ஆண்டுகளாக நண்பராக இருந்த காரணத்தை அனுசரித்து எனக்கு உரிமை இல்லாத வீடு ஆகியவற்றை சேர்த்து 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. எனக்கு மனைவியும், 2 மகன்களும் 1 மகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் மற்றும் என்னுடைய குடும்பத்தினர் வழக்கு சொத்தில் ஒருபோதும் குடியிருந்தது இல்லை என்றால், நாங்கள் ஏற்கனவே குடியிருந்தோம் ஆனால் தற்போது இல்லை.

எங்களுடைய வாக்காளர் அடையாள அட்டை மற்றும் பிற ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. இன்று வரை 1-ம் வாதி பச்சியம்மாள் வழக்கு சொத்தில் வசித்து வருகிறார் என்றால், ஏதோ ஒரு நாள் வருகிறார் போகிறார். நான் எந்த நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால், மாரியம்மன் ரோடுவேஸ் என்ற நிறுவனத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன் மற்றும் வெளிமாநிலங்களுக்கும் ஓட்டுனராக சென்று வருகிறேன். கடந்த 30 ஆண்டுகளாக இதே தொழில் சம்மந்தமாக வெளி மாநிலங்களுக்கு சென்று வருகிறேன் என்றால், சரிதான். வெளிமாநிலங்களுக்கு ஒரு முறை சென்று வருவதற்கு சுமார் 15 நாட்கள் ஆகும் என்றால், சரிதான். என்னுடைய மனைவி, மகன்கள் மற்றும் மகள் தற்போது ஆனைக்கல்பாளையம் என்ற ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். வெளிமாநிலத்திற்கு நான் சென்றுவிட்டு திரும்ப வரும்போது ஆனைக்கல்பாளையத்திற்கு தான் செல்வேன் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் **C.D மற்றும் புகைப்படங்கள் (எண்ணிக்கை** 12) என்னுடைய வீடு தான் **அவை வா.த.சா.ஆ.11-ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னுடைய தாயார் மற்றும் என்னுடைய சகோதர சகோதரியுடன் சுமூகமான உறவில் இல்லை என்றால், அவ்வப்போது சென்று வருவேன். 2-ம் வாதி ரவிகுமார் எங்கு வசித்து வருகிறார் என்றால், சேலம் மாவட்டம் சீலநாய்கன்பட்டியில் வசித்து வருகிறார். ஆனால் முகவரி தெரியாது. என்னுடைய மூத்த சகோதரி ராஜாமணி எங்கு வசித்து வருகிறார் என்றால், சேலம் மாவட்டம் காட்டுரில் வசித்து வருகிறார். ஆனால் அவருடைய முகவரியும் தெரியாது. பச்சியம்மாள் வசிக்கும் இடம் எனக்கு தெரியுமா என்றால், என்னுடைய சகோதரருடன் சேலம் மாவட்டம் சீலநாய்கன்பட்டியில் வசித்து வருகிறார். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு எங்களுக்குள் எந்த உறவும் இல்லை என்றால், திருமணம், இறப்பு ஆகிய நிகழ்வுகளுக்கு சென்று வருவேன். வழக்கு சொத்து சம்மந்தமாக எனக்கும் வாதிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்து வருகிறது என்றால், சரிதான். குறிப்பிட்டு எங்களுக்குள் என்ன பிரச்சனை என்றால், 5 ½ செண்ட் நிலம் வாதிகளுக்கு இல்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனக்கு வழக்கு விவரங்கள் எதுவும் தெரியவில்லை என்றும், 1-ம் பிரதிவாதி எஸ்.கே.சேகர் கூறியதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதிகள் 5 ½ சென்ட் நிலத்தில் 1 செண்ட் போக வீடு மற்றும் அதனுடன் இணைந்த நிலங்கள் ஆக 4 ½ சென்ட் தங்களுக்கு உள்ளது என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்,

சரியல்ல. நான் சேகருக்கு எழுதிக் கொடுத்த வீட்டுடன் சேர்ந்து 11 செண்ட் நிலத்திற்கான விற்கிரைய பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. நான் 92 செண்ட் நிலம் உள்ளது என்றும், வாதி 97 ½ செண்ட் நிலம் உள்ளதாக கூறும் நிலையில் அதனை அளந்து பார்த்தால் தான் தெரியவரும் என்றால், நான் ஏற்கனவே 3 முறை அளந்து பார்த்துவிட்டேன். எந்த தேதியில் எந்த மாதத்தில் யாரை வைத்து 3 முறை யாரால் அளக்கப்பட்டது அவ்வாறு அளந்ததற்கான ஆவணம் சம்மந்தமாக எந்த சாட்சியமும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் வழக்கிற்காக 3 முறை அளந்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதிகள் அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்தார்கள் என்றும் 97 ½ செண்ட் நிலம் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும் வாதிகள் எடுத்த முயற்சியை நான் முறியடித்துவிட்டேன் என்றால், சரியல்ல. வாதிகள் இந்த வழக்கில் கேட்ட பரிகாரங்கள் வழங்கத்தக்கது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம்: 04.00P.M.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.03.05 19:09:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.